**சென்னை–5, வேளாண்மை இயக்குநர் அலுவலக வேளாண்மை கூடுதல் இயக்குநர் (பணிமேலாண்மை) அவர்களின் செயல்முறை ஆணைகள்.**

பிறப்பிப்பவர்:– திரு. ஸ்ரவன் குமார் ஜடாவத், இ.ஆ.ப.,

செ.மு.ஆணை எண். அநிபி.5/188390/ 2017 நாள். 12.08.2021

பொருள்: பணிக்குழு – தமிழ்நாடு அமைச்சுப்பணி – கருணை அடிப்படையில் பணி நியமனம் – திரு. A. அருண்பாலன், இளநிலை உதவியாளர் (பி.அ) – இவ்வலுவலகத்தில் 05.08.2019 முற்பகல் முதல் பணியில் சேர்ந்தது – இளநிலை உதவியாளர் (பி.அ) பதவியில் பணிவரன்முறை செய்து ஆணையிடல் – தொடர்பாக.

பார்வை:
1. இவ்வலுவலக வேளாண்மை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை எண். அநிபி6/188390/2017, நாள். 28.06.2019.
2. திரு. A. அருண்பாலன், இளநிலை உதவியாளர் (பி.அ)–இன் பணியேற்பு கடித நாள். 05.08.2019.
3. அரசாணை (நிலை) எண். 48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1)த்துறை, நாள். 26.02.2021.

••••••

**ஆணை:–**

வேலூர், வேளாண்மை இணை இயக்குநர் அலுவலக கட்டுப்பாட்டில் நாட்றாம்பள்ளி, வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில் வேளாண்மை அலுவலர் ஆகப் பணிபுரிந்து 15.02.2008 அன்று அமரரான பி. அன்பழகன் அவர்களது வாரிசுதாரர் / மகன் திரு. A. அருண்பாலன் அவர்களுக்கு கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப்பணியில் ரூ.19500–62000 (Level-8) என்ற ஊதிய விகிதத்தில் தற்காலிக பணியமர்வில் இளநிலை உதவியாளர் (பி.அ) ஆகப் பணிநியமனம் செய்து பார்வை (1)–இல் காணும் இவ்வலுவலக செயல்முறை ஆணையின்படி சென்னை–5, வேளாண்மை இயக்குநர் அலுவலகத்தில் பணி நியமனம் செய்து ஆணையிடப்பட்டது.

2) இதனைத் தொடர்ந்து பார்வை (2)இன்படி திரு. A. அருண்பாலன் அவர்கள் இவ்வலுவலகத்தில் இளநிலை உதவியாளர் (பி.அ) ஆக 05.08.2019 முற்பகல் பணியில் சேர்ந்து கொண்டார்.

3) எனவே, கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டு இவ்வலுவலகத்தில், இளநிலை உதவியாளர் (பி.அ) ஆக 05.08.2019 முற்பகல் பணியில் சேர்ந்து, பணிபுரிந்து வரும் திரு. A. அருண்பாலன் அவர்களின் பணியினை இளநிலை உதவியாளர் (பி.அ) பதவியில் பார்வை (3)–இல் காணும் அரசாணையின்படி தனியர் பணியில் சேர்ந்த நாளான 05.08.2019 முற்பகல் முதல் வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

(தொடர்ச்சி...)

4) மேற்படி, தனியரின் பணியினை வரன்முறைப்படுத்தப்பட்டுள்ளதை தொடர்ந்து, பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து தகுதிகாண் பருவத்தில் வைத்து தொடர் மூன்றாண்டு பணிக்காலத்தில் இரண்டாண்டு பணிக்காலத்தை திருப்திகரமாக நிறைவு செய்ய வேண்டும் எனவும், பவானிசாகர் அடிப்படைப் பயிற்சி முடித்த பின்னரே தகுதிகாண் பருவம் முடித்து ஆணை வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஒம்/-ஸ்ரவன் குமார் ஜடாவத்,
வேளாண்மை கூடுதல் இயக்குநர் (ப.மே)

பெறுநர்

திரு. A. அருண்பாலன்,
இளநிலை உதவியாளர் (பி.அ),
'மாபதி' பிரிவு, இவ்வலுவலகம்.

நகல்: 'அபபி' மற்றும் 'பணம்' பிரிவுகள், இவ்வலுவலகம்.
நகல்: அநிபி-5 பொருள்கோப்பு.

//உத்திரவின்படி//

17/8/2021
கண்காணிப்பாளர்.

17/08/2021